Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 28.03.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

தேதி : 28.03.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

- குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், ராஞ்சியில் உள்ள இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தின் 15ஆவது பட்டமளிப்பு விழாவில், இன்று பங்கேற்றார்.

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, அகில இந்திய வானொலியில் 132ஆவது மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியில், நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

- உத்தரப்பிரதேச மாநிலம், நொய்டாவில், முடிவடைந்த சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று திறந்து வைத்தார்.

- ஐபிஎல் 20-20 கிரிக்கெட் போட்டிகள் பெங்களூருவில் இன்று தொடங்குகின்றன.

*குடியரசு துணைத் தலைவர் - (4)*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் அமைந்துள்ள இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தின் 15ஆவது பட்டமளிப்பு விழாவில், இன்று பங்கேற்றார். இந்தப் பயணம் குறித்த கூடுதல் தகவல்…

(வாய்ஸ்)

*குடியரசு துணைத் தலைவர் - 2 (15)*

(வாய்ஸ்)

இன்று காலை ஜார்க்கண்ட் மாநிலம் குந்தியில் உள்ள உலிஹாட்டு கிராமத்தைச் சென்றடைந்த குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பகவான் பிர்ஸா முண்டாவின் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி அவரது குடும்பத்தினருடன் கலந்துரையாடினார். பிர்ஸா முண்டாவின் வாரிசான சுக்ராம் முண்டாவை கவுரவித்த அவர், அவர்களது குடும்பத்தினரின் குறைகளை கேட்டறிந்தார். காஷ்மீர் முதல் – கன்னியாகுமரி வரை, மக்கள் பிர்ஸா முண்டாவின் தியாகத்தில் பெருமிதம் கொள்வதாக அவர் கூறினார்.

இதனிடையே, மத்திய சட்ட அமைச்சகத்தின் சார்பில், புதுடெல்லியில் நாளை நடைபெறும் தேசிய நீதியியல் கலந்தாய்வு கூட்டத்திலும் அவர் பங்கேற்கிறார். நீதியியல் துறை சார்ந்த பிரச்சனைகளுக்கு ஆக்கப்பூர்வமான நிலைபாடுகளுடன் தீர்வு காண இக்கூட்டம் அமைகிறது. தொழில்நுட்ப சட்ட உதவிகள் ஆக்கப்பூர்வமான அதிகாரங்கள், அனைவரையும் ஒருங்கிணைத்தல், பேச்சுவார்த்தைகளை வலுப்படுத்த இக்கூட்டம் பெரிதும் பயனளிக்கும் என்று சட்ட அமைச்சகம் கூறியுள்ளது.

*மன் கீ பாத் (7)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அகில இந்திய வானொலியில் 132ஆவது மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியில், நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார். அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யு-டியூப் அலைவரிசை, மை கவ் இணையதளம், நியூஸ் ஆன் ஏர் செயலியில், இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பாகும். தொடர்ந்து, பிரதமர் உரையின் தமிழாக்கம் காலை 11.30 மணிக்கும், இரவு 8 மணிக்கும் இடம் பெறும்.

*பிரதமர் நொய்டா -1 (6)*

உத்தரப்பிரதேச மாநிலம், நொய்டாவில், முடிவடைந்த சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று திறந்து

வைத்தார். மேலும், 40 ஏக்கர் பராமரிப்பு, பழுது பார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், வளர்ந்த உத்தரப்பிரதேசம், வளர்ந்த இந்தியாவிற்கு ஒரு புதிய அத்தியாயம் என்று கூறினார். இந்நிகழ்ச்சியில், பிரதமர் உரை குறித்த கூடுதல் தகவல்….

(வாய்ஸ்)

*பிரதமர் நொய்டா -2(19)*

(வாய்ஸ்)

இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான சர்வதேச விமான நிலையங்களைக் கொண்ட மாநிலங்களில் ஒன்றாக உத்தரப்பிரதேசம் இப்போது உருவெடுத்து உள்ளதாகக் கூறினார். இந்த விமான நிலையம் ஆக்ரா, மதுரா, அலிகார், காசியாபாத், இடாவா மற்றும் பரிதாபாத் உள்ளிட்ட மேற்கு உத்தரப்பிரதேசத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு பயனளிக்கும் என்று தெரிவித்த அவர், இந்த விமான நிலையம் மேற்கு உத்தரப் பிரதேசத்தின் விவசாயிகள், சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மற்றும் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை கொண்டு வரும் என்று குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய அவர், மேற்காசியாவில், கடந்த ஒரு மாதமாக நடந்து வரும் போர்க் காரணமாக, உணவு, பெட்ரோல் – டீசல், எரிவாயு மற்றும் உரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். இந்நெருக்கடியைச்

சமாளிக்க ஒவ்வொரு நாடும், முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், இந்தியா, தனது குடிமக்களின் பலத்தை நம்பி இதனை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து அதிக அளவு கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவை இந்தியா இறக்குமதி செய்கிறது என்றும் இந்த நெருக்கடியின் சுமை சாதாரண குடும்பங்கள் மற்றும் விவசாயிகள் மீது, விழாமல் இருப்பதை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருவதாகவும் கூறினார்.

*தேர்தல் ஆணையம் (12)*

தமிழகம், அஸ்ஸாம், கேரளம், மேற்கு வங்கம் மற்றும் புதுச்சேரி சட்டப் பேரவைத் தேர்தல், நேர்மையாகவும், அமைதியாகவும் நடைபெறுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக, தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. பதற்றம் அளிக்கக் கூடியவை என கண்டறியப்பட்டுள்ள வாக்குச் சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதாக, தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தத் தேர்தலில், பண பலம் பயன்படுத்தப் படுவதை தடுப்பதற்கான அனைத்து கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கென அமைக்கப்பட்ட பறக்கும் படையினர் உரிய ஆவணங்கள் இன்றி, கொண்டு செல்லப்படும் பணம்

மற்றும் பரிசுப் பொருட்களை பறிமுதல் செய்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*மோடி – பூத் கமிட்டி (15)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் திங்கட்கிழமை, நமோ செயலி மூலம் அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் கட்சி பூத் கமிட்டி தொண்டர்கள் இடையே உரையாற்றுகிறார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், கடந்த 10 ஆண்டுகளில் அஸ்ஸாம் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது என்றும் வளர்ச்சிப் பணிகள் காரணமாக, தேசிய ஜனநாயக கூட்டணி அரசும், மேலும் 5 ஆண்டுகளுக்கு மக்கள் முன்னேற்றங்களை வரவேற்க தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், புதுச்சேரியில், கடந்த 5 ஆண்டுகளில், மக்களின் விருப்பங்களை இரட்டை எஞ்சின் தேசிய ஜனநாயக கூட்டணி நிறைவேற்றி உள்ளதாகவும், புதுச்சேரியில் உள்ள கட்சித் தொண்டர்களுடன் உரையாற்றுவதில் அதிக உற்சாகம் கொள்வதாகவும் பதிவிட்டுள்ளார்.

நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்று கூறிய பிரதமர், இக்கூட்டணிக்கு வாக்களிக்க மக்கள் தயாராகி விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

*அமித் ஷா (11)*

மேற்காசியாவில் நிலவிவரும் பதற்றமான சூழ்நிலை காரணமாக இந்தியாவில் மட்டும்தான் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்படவில்லை என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். புதுடெல்லியில், நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில், பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டினார்.

பெட்ரோலியப் பொருட்களின் விநியோகம் சீராக நடைபெறுவதையும், மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். மக்கள் எவ்வித சிரமத்தையும் எதிர்கொள்ளக் கூடாது என்ற நோக்கத்தில், மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

*பியூஷ் கோயல் (18)*

உலக வர்த்தக அமைப்பு சார்ந்த பேச்சுவார்த்தைகளில், அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் சமமான வாய்ப்புகளின் அவசியத்தை மத்திய

வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். கேமரோனில் 14ஆவது அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டில் உரையாற்றிய அவர், உருகுவே, பேச்சுவார்த்தையின் போது, உறுப்பு நாடுகளுக்கு உரிய வாய்ப்பு வழங்கப்படாததை சுட்டிக் காட்டினார். திறன் கட்டமைப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், உலக வர்த்தகத்தில் பங்களிப்பு போன்றவற்றில் உறுப்பு நாடுகளுக்கு நியாயமான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். பன்முக வர்த்தக முறை என்பது, படைப்பாற்றல் திறனையும், வளர்ச்சியையும், வாய்ப்புகளையும் உறுதி செய்வதாக இருக்க வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டினார். சர்வதேச வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகிக்கும், உலக வர்த்தக அமைப்பில், இந்தியாவும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற திரு. பியூஷ் கோயல் விருப்பம் தெரிவித்துள்ளார். இம்மாநாட்டின் ஒரு பகுதியாக, கனடா வர்த்தக அமைச்சர் திரு. மனீந்தர் சித்து, அமெரிக்க வர்த்தக பிரதிநிதி திரு. ஜேமீசன் கிரியர் உள்ளிட்டோரையும் திரு. பியூஷ் கோயல் சந்தித்து, இரு தரப்பு வர்த்தக ஒத்துழைப்பு குறித்துப் பேசினார்.

*ஹர்தீப் சிங் புரி (6)*

நாட்டின் எரி சக்தி, உள் கட்டமைப்பு தொடர்ந்து வலுப்படுத்தப்பட்டு வருவதாக, மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார். சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்திய எண்ணெய் கழகம் இதுவரை இல்லாத

அளவாக கடந்த வியாழக்கிழமை ஒரே நாளில் தினசரி எண்ணெய் எரிவாயு உற்பத்தியை, ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 159 பீப்பாய் அளவிற்கு உற்பத்தி செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

*தேர்தல் விழிப்புணர்வு – புதுச்சேரி (10)*

எதிர்வரும் சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, இன்று, புதுச்சேரி அரசின் போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்கப்படும் பேருந்துகளில் பயணிகளுக்கு வழங்கப்படும் பயணச்சீட்டில் வாக்காளர் விழிப்புணர்வு செய்திகள் அடங்கிய பயணச் சீட்டு வெளியீட்டு விழா நடைபெற்றது. அவசியம் வாக்களிப்போம் என்ற கருத்தினை வலியுறுத்தி வழங்கப்படும் பேருந்து பயணச் சீட்டினை மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் வெளியிட்டார்.

இவ்விழாவில், புதுச்சேரி மாநில அரசு போக்குவரத்துக் கழகத்தின் பொது மேலாளர் திரு. அருணாச்சலம் மற்றும் போக்குவரத்துக் கழக பேருந்து நடத்துனர்கள் கலந்து கொண்டனர்.

*ஐபிஎல் (9)*

ஐபிஎல் 20-20 கிரிக்கெட் போட்டிகள் பெங்களூருவில் இன்று தொடங்குகின்றன. இன்றிரவு 7.30 மணிக்கு, சின்னசாமி மைதானத்தில்

நடைபெறும் முதல் போட்டியில், நடப்பு சாம்பியன் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு – சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை எதிர் கொள்கிறது.

குவஹாத்தியில் நாளை மறுநாள் நடைபெறும் ஆட்டத்தில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி – ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

இதனிடையே காயம் காரணமாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் திரு. மகேந்திர சிங் தோனி இரண்டு வாரங்களுக்கு விளையாட மாட்டார் என்று நிர்வாகம் அறிவித்துள்ளது.

*அருங்காட்சியகம் (13)*

அமெரிக்காவில் உள்ள ஸ்மித் சோனியன் தேசிய கலை அருங்காட்சியகத்தில் இருந்து, சட்டவிரோதமாக இந்தியாவில் இருந்து அகற்றப்பட்ட 3 விலை மதிப்பற்ற தொல் பொருட்கள் இந்தியாவிற்கு திரும்ப உள்ளன. 9ஆம் நூற்றாண்டின் - வெண்கல நடராஜர் சிலை, 12ஆம் நூற்றாண்டின் - சோமாஸ் கந்தர் மற்றும் 16ஆம் நூற்றாண்டின் - சுந்தரர் ஆகிய சிலைகள் இதில் அடங்கும்.

அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகத்தின் துணைத் தலைவர் நம்கியா கம்பா மற்றும் NMAA இயக்குநர் டாக்டர் சேஸ் ராபின்சன்

ஆகியோர் இந்த ஒப்பந்த த்தில் கையெழுத்திட்டனர். 1956 மற்றும் 1959 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கோவில்களில் உள்ள சிற்பங்களைக் காட்டும் பிரெஞ்ச் பாண்டிச்சேரி நிறுவனத்தின் புகைப்பட ஆவணக் காப்பகத்தின் சான்றுகள் மூலம் இந்த வெண்கலச் சிலைகள் இந்திய சட்டங்களை மீறி எடுக்கப்பட்டதை உறுதி செய்கிறது.

*வானிலை (5)*

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்குச் சுழற்சி காரணமாக, மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் ஏனைய தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், ராஞ்சியில் உள்ள இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தின் 15ஆவது பட்டமளிப்பு விழாவில், இன்று பங்கேற்றார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அகில இந்திய வானொலியில் 132ஆவது மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியில், நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

உத்தரப்பிரதேச மாநிலம், நொய்டாவில், முடிவடைந்த சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று திறந்து வைத்தார்.

ஐபிஎல் 20-20 கிரிக்கெட் போட்டிகள் பெங்களூருவில் இன்று தொடங்குகின்றன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. NV / BR / RK